செ.வெ.எண்.207 நாள்.26.03.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரும் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை பேருந்து நிறுத்தத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்து வரும் பேட்டரி கார் சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக பேருந்து நிறுத்தம் (கொக்கிரகுளம்) அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு வரும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு அழைத்து வரும் பேட்டரி கார் சேவை துவக்க நிகழ்ச்சி இன்று (26.03.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பேட்டரி கார் சேவையினை தொடங்கி வைத்து, பேட்டரி காரில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களை அழைத்து வந்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு தினந்தோறும் 250 முதல் 500 பொதுமக்கள் வரையிலும் திங்கட்கிழமைகளில் 700 முதல் 1000 பொதுமக்கள் வரையிலும் பல்வேறு கோரிக்கைகளுக்காக வருகை தருகின்றனர். இதில், முதியோர்களும், மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர். மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேவையான சக்கர நாற்காலிகள் ஏற்கனவே வைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. இருப்பினும், பேருந்து நிறுத்தத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சுமார் 150 மீட்டர் தூரத்திற்கு நடந்துவர முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சிரமம்படுகின்றனர். சிரமத்தை போக்கும் வகையில், பேருந்து நிறுத்தத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்து வரவும், திரும்பவும் பேருந்து நிறுத்தத்தில் கொண்டு சென்று விடும் வகையில் பேட்டரி கார் ரூ.5.50 இலட்சம் மதிப்பில் தனியார் பங்களிப்பில் இன்று சேவை துவங்கப்பட்டுள்ளது. இதற்கென தனி ஓட்டுநர் நியமிக்கப்பட்டு, அனைத்து அலுவலக வேலை நாட்களிலும் இச்சேவை நடைபெறும். முதியோர்களும், மாற்றுத்திறனாளிகளும் இச்சேவையை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

தொடர்ந்து, தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பயன்படுத்தும் வகையில் மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை தரம்பிரித்து கையாளும் வகையில், வைக்கப்படவுள்ள 17 குப்பைத் தொட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்திமுருகன், பாளை வட்டாட்சியர் திரு.கந்தசாமி, தூய்மை பாரத இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.கோவிந்தன், இளம் அலுவலர் திரு.சங்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.